# வட மாகாண ஆசிரியர் இடமாற்றக் கொள்கை

வடக்கு மாகாணக் கல்விச் செயற்பாடுகளை மிகவும் பயன்மிக்கதாக மேற்கொள்ளக்கூடியவாறும் மாணவர்களினதும் மற்றும் ஆசிரியர்களினதும் உயர்ந்த பட்ச நலன்புரிச் செயற்பாடுகளுக்கு பொருந்தக்கூடியவாறும் வட மாகாண இடமாற்றக் கொள்கை அமைதல் வேண்டும்.

## 1.0 வட மாகாண இடமாற்றக் கொள்கையின் நோக்கங்கள்

1.1 கல்வியானது, சகல சந்தர்ப்பங்களிலும் மாணவர்களைக் கேந்திரமாகக் கொண்டிருக்க வேண்டுமென்பதால் ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கும்போது மாணவர்களின் கற்றல் தேவைக்கு முன்னுரிமை வழங்கல்.

1.2 கல்வியின் பண்புசார் விருத்தியை நிலையாகப் பேணுவதற்கு ஆசிரியர்களின் அறிவு, திறமை மற்றும் சிந்தனை அடிப்படையாக இருப்பதனால் ஆசிரியர் இடமாற்றத்தின் மூலம் ஆசிரியர்களுக்கு தமது அறிவு மற்றும் திறமையினை விருத்தி செய்வதற்கான சந்தர்ப்பம் வழங்கல்.

1.3 மாகாண பாடசாலைகளில் காணப்படும் ஆசிரிய ஆளணித் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் தடையின்றி நடைபெற மாகாணத்தில் காணப்படும் ஆசிரிய வளத்தை பயன்படுத்துதல்.

1.4 கல்வி தொடர்பாக மாகாணத்துள் பிரதேச ரீதியாக காணப்படும் வேறுபாடுகளை இழிவளவாக்கி மாணவர்களை அடிப்படையாகக் கொண்ட கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை தடையின்றி தொடர்ச்சியாக மேற்கொள்ளத்தக்க வகையில் ஆசிரிய இடமாற்றச்சபை நெறிப்படுத்தப்படல்.

1.5 கல்வி வலயங்கள் மற்றும் பாடசாலைகளுக்கிடையில் காணப்படும் பாடரீதியான தேவைப்பாடுகளை நியாயமான சமத்துவ (Equity basis) அடிப்படையில் பகிரப்படுவதனை உறுதிப்படுத்தலுடன் பாடரீதியான மிகை மற்றும் தேவைப்பாடுகள் வலயங்கள் மற்றும் கோட்டங்களுக்கிடையில் நியாயமான விகிதத்தில் சமமாக பரம்பலாக்கப்பட்டிருப்பதனை உறுதிப்படுத்துதல்.

1.6 ஆசிரியர்களின் தொழில் பாதுகாப்புடன் ஆசிரிய வளத்தை முறையான முகாமைத்துவத்தின் கீழ் உயர்ந்த பட்ச செயற்றிறனை அடைவதற்கு இக் கொள்கை மூலம் சந்தர்ப்பம் வழங்கல்.

## 2.0 இடமாற்றக் கொள்கையின் நியாயாதிக்கமும் /அதிகாரங்களும்

2.1 தேசியப் பாடசாலைகள் நீங்கலாக வடக்கு மாகாணத்தின் நிர்வாகத்திற்குட்பட்ட அனைத்து அரச பாடசாலைகள் அல்லது வட மாகாணப் பாடசாலை என குறிப்பிடப்படும் அனைத்து பாடசாலைகளிலும் பணியாற்றும் இலங்கை ஆசிரிய சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு இக் கொள்கை பொருந்தியமையும்.

2.2 வட மாகாண நிர்வாகத்திற்குட்பட்ட கல்வி வலயங்களுக்குள் பாடசாலைகளுக்கிடையில் ஆசிரியர்களை இடமாற்றம் செய்வதற்கான அதிகாரமளித்தல்.

2.3 வட மாகாண நிர்வாக பரப்பிற்குட்பட்ட வலயங்களுக்கு இடையேயான ஆசிரியர் இடமாற்றங்களை செய்வதற்கான அதிகாரமளித்தல்.

2.4 வட மாகாணத்திற்குட்பட்ட பாடசாலையொன்றில் கடமையாற்றிய ஆசிரியர்களை வேறு மாகாணங்களுக்கு விடுவித்தல் தொடர்பான பரிந்துரைகளை செய்வதற்கான தீர்மானமெடுத்தல்.

## 3.0 வட மாகாண ஆசிரியர் இடமாற்றத்திற்கான நிபந்தனைகள்

3.1 தேசிய ஆசிரியர் இடமாற்றக் கொள்கைக்கமைவாகவும் வடக்கு மாகாணத்தின் தனித்துவமான சூழ்நிலைகளுக்கேற்ப இடமாற்றக் கொள்கை நடைமுறைப் படுத்தப்படல் வேண்டும்.

Original Seen
Certified True Copy



Scanned with CamScanner

3.2 ஆசிரியர்கள் தமது நியமன நிபந்தனைகளுக்கமைவாக வடக்கு மாகாணத்தில் எப்பாகத்திலும் சேவையாற்ற வேண்டும்.

3.3 பாடசாலையை அடிப்படையாகக் கொண்டு ஆசிரியர்களை சேர்த்துக் கொள்ளும் கொள்கை அடிப்படையில் ஆசிரியர் ஒருவர் வசதியான பாடசாலையில் தொடர்ந்து ஆகக்கூடியது 7 வருடங்கள் சேவையினைப் பூர்த்தி செய்திருப்பின் வேறு பாடசாலைக்கு இடமாற்றம் வழங்கப்படுவதன் மூலம் வசதி குறைந்த பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு வசதியான பாடசாலைகளில் கடமையாற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். மாணவர்களது கல்விக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் இவ் இடமாற்றங்கள் செய்யப்பட வேண்டும்.

3.4 ஆசிரியர்கள் தாம் நியமிக்கப்பட்ட வலயமொன்றில் இலங்கை ஆசிரிய சேவை பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆசிரிய பிரமாணக் குறிப்பில் பாடசாலையை அடிப்படையாகக் கொண்டு ஆசிரியர்களை சேர்த்துக்கொள்ளும் கொள்கை அடிப்படையில், (முதல் நியமனம்) நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் நியமனப் பாடசாலையில் அல்லது அதே வலயத்தில் உள்ள கஸ்ரப் பிரதேச பாடசாலையொன்றில் நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைவாக தொடர்ச்சியாக சேவையாற்ற வேண்டிய முழுக்காலத்தையும் பூரணப்படுத்த வேண்டும்.

3.5 எந்தவொரு வலயத்திலும் அல்லது பாடசாலையிலும் மேலதிகமாக ஆசிரியர்கள் நியமிக்கப்படாதவாறு வலய ரீதியாக, பாடசாலை ரீதியாக பற்றாக்குறை விபரங்கள் பற்றிய தகவல்கள் பெறப்பட்டு அதனடிப்படையிலேயே இடமாற்றங்கள் அமைதல் வேண்டும்.

3.6 மேலதிக ஆசிரியரை இனங்காணுதல் தேசிய ஆசிரியர் இடமாற்றக் கொள்கையில் 3.2 அதாவது,

“ சேவைக்காலம் தொடர்பான விடயங்கள்

இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆசிரிய பிரமாணக் குறிப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள நிலையியற் குழுவினால் பெயரிடப்படும் பாடசாலை ஒன்றில் குறைந்தபட்ச சேவைக்காலம் சகல ஆசிரியர்களும் சேவையாற்றியிருக்க வேண்டும்.

i. அதிகஷ்ட பாடசாலை அல்லது கஷ்ட பாடசாலை -3 வரு (குறைந்த பட்சம்)
ii. விருப்பமற்ற பாடசாலையில் -4 வரு (குறைந்த பட்சம்)
iii. விருப்பமான பாடசாலை -8 வரு (ஆகக் கூடிய)
iv. மிக விருப்பமான பாடசாலை -6 வரு (ஆகக் கூடிய) ”

குறிப்பிடப்பட்டுள்ளதை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ள வேண்டியதுடன் பாடசாலைகளில் தொடர்ந்தும் மேலதிக ஆசிரியர் எண்ணிக்கை ஏற்படக் கூடியவாறு ஆசிரியர்களை நியமிக்கக் கூடாது.

3.7 அரசினால் நிர்ணயிக்கப்பட்ட ஓய்வுபெறும் வயதுக்கு முன்னைய மூன்று வருடங்கள் சேவைக்காலம் உள்ள ஆசிரியர்களுக்கு அவர்களின் கோரிக்கையை தவிர வேறு வலயங்களுக்கு இடமாற்றங்களை மேற்கொள்ளக்கூடாது.

3.8 மேலே 3.7 இல் கூறப்பட்ட தகைமைகளை பூர்த்தி செய்துள்ள ஆசிரியர் தமது வதிவிடம் அமைந்துள்ள அல்லது விருப்பத்திற்குரிய வலயமொன்றிற்கு அல்லது வதிவிடத்திற்கு மிக அண்மையாகவுள்ள அவரது நியமன வகுதிக்குரிய ஆளணி வெற்றிடமுள்ள பாடசாலையொன்றிற்கு இடமாற்றத்தைக் கோரிப் பெற்றுக்கொள்ள முடியும்.

3.9 தனது அல்லது தனது குடும்பத்தின் மருத்துவ காரணங்களின் அடிப்படையில் ஆசிரியர் ஒருவர் இடமாற்றம் கோரும்போது மருத்துவ காரணங்களை உறுதி செய்வதற்காக அரச வைத்தியர் சார்பாக அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ள வேண்டும்.



Scanned with CamScanner

3.10 கர்ப்பிணித் தாய்மார்கள் தொடர்பாக அவரின் விருப்பமின்றி இடமாற்றம் செய்யக்கூடாது. கர்ப்பிணித் தாய்மார்களினால் இடமாற்றம் கோரும் போது செயற்பட வேண்டிய அரச வைத்திய அறிக்கை மூலம் உறுதி செய்யப்படும் விடயங்களை அடிப்படையாக கொண்டு முடிவுகள் மேற்கொள்ளப்படும்.

3.11 மகப்பேற்றின் பின்னர் தாய் ஒருவருக்கு பிள்ளை கிடைத்து ஆகக்கூடியது ஒரு வருடம் வரை தமது நிரந்தர வதிவிடத்திற்கு அருகாமையில் உள்ள பாடசாலைக்கு தற்காலிகமாக சேவையில் இணைத்துக்கொள்வதற்கான உரிமையை வழங்க முடியும். இதற்காக ஆசிரிய தாய்மார்களால் கோரிக்கை சமர்ப்பிப்பது அத்தியவசியமானதாகும்.

3.12 ஆசிரியரது குடும்ப அங்கத்தவர்களின் மருத்துவ நிலைமை இடமாற்றம் பெறுவதற்கு கருத்திற் கொள்ளப்படும்.

ஆயினும் இதனடிப்படையில் இடமாற்றங்களை தீர்மானிக்கும் போது தேசிய இட மாற்றக் கொள்கையின் சரத்து 1.1 அதாவது,
“கல்வி சகல சந்தர்ப்பங்களிலும் மாணவர்களைக் கேந்திரமாக கொண்டிருக்க வேண்டுமென்பதால் ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கும்போது மாணவர்களின் தேவைக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்” இதற்கமைவாகவே செயற்பட வேண்டும்.

## 4.0 இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்கக்கூடிய தகைமைகள் அல்லது தகுதிகள்

4.1 முதல் நியமனம் பெற்ற ஆசிரியர்கள் தமது முதல் நியமனத்திற்குரிய பாடசாலையில்/ வலயத்தில் நியமனக் கடிதத்தில் குறித்துரைக்கப்பட்டதற்கமைவான கட்டாய சேவைக் காலத்தினை நிறைவு செய்ததன் அடிப்படையில் மட்டுமே வலயங்களுக்கிடையிலான இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்க தகைமையுடையவராவார். ஆயினும் குறித்த வலயத்தினுள் வெற்றிடமுள்ள பாடசாலைக்கு இடமாற்றத்திற்காக பரிசீலிக்கப்படலாம்.

4.2 குறிப்புரை 4.1 இற்கமையாத ஏனைய ஆசிரியர்கள் குறித்த வலயத்தில் ஆறு(6) வருடங்கள் பூர்த்தி செய்ததன் அடிப்படையில் மட்டுமே வருடாந்த வலயங்களுக்கிடையிலான ஆசிரிய இடமாற்றத்திற்கு விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும்.

4.3 ஆசிரியர்கள் தமது விண்ணப்பங்களை பூரணப்படுத்தி குறித்துரைக்கப்பட்ட முடிவுத்திகதிக்கு முன்னதாக தத்தமது வலயக்கல்வி அலுவலகங்களில் சமர்ப்பிக்க வேண்டும் சகல விண்ணப்பங்களும் வலய இடமாற்ற சபைகளினால் பரிசீலிக்கப்பட்டு சிபார்சு செய்யப்பட்டவற்றை தனியாகவும் சிபார்சு செய்யப்படாதவை தனியாகவும் பட்டியலிடப்பட்டு தனித்தனியாக பொதியிடப்பட்டு இறுதித்திகதிக்கு முன்னர் மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

4.4 குறித்ததோர் வலயத்தில் 6 வருடங்களிற்கு மேல் சேவையாற்றும் ஆசிரியர்களை சேவையின் தேவையைக் கருத்திற் கொண்டு வேறு வலயத்திற்கு இடமாற்றம் செய்வதற்கான தீர்மானங்களை மேற்கொள்வதற்கு மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு பூரண அதிகாரமுண்டு.

4.5 இடமாற்ற விண்ணப்பத்தில் ஆசிரியர் தமது விருப்பத் தெரிவிற்குரிய 3 வலயங்களை தெரிவு செய்து குறிப்பிடுதல் கட்டாயமானதாகும். ஆசிரிய ஆளணி வெற்றிடத்தின் அடிப்படையில் விருப்பத் தெரிவிற்குட்பட்ட வலயமொன்றிற்கோ அல்லது வேறு வலயமொன்றிற்கோ இடமாற்றம் வழங்க முடியும்.

4.6 குறிப்புரை 4.2, 4.4 ஆகியவற்றில் குறித்துரைக்கப்பட்ட 6 வருடங்கள் என்ற காலப்பகுதியினுள் இணைப்பிலிருத்தல், தற்காலிக இடமாற்றத்திலிருத்தல், கற்கை விடுமுறையில் செல்லுதல் உட்பட்ட அனைத்து ஆசிரியர்களின் தனிப்பட்ட மற்றும் வாண்மை நோக்கம் கருதிய விடுமுறைகள் மற்றும் வேறு வலய சேவைகள் என்பன கருத்தில் கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் இவ்வாறான காலப்பகுதிகள் குறித்த நிரந்தர வலயத்தில் பூர்த்தி செய்யப்படுதல் கட்டாயமானதாகும்.

4.7 இடமாற்ற விண்ணப்பங்களில் தவறான, திரிபுபடுத்தப்பட்ட தகவல்களை வழங்குதல் தண்டனைக்குரிய குற்றமாகும்.

சி.திருவாகரன்
செயலாளர்
... ஆணைக்குழு

Original Seen
Certified True Copy



Scanned with CamScanner

4.8 ஆசிரியர்கள் தத்தமது இடமாற்ற விண்ணப்பங்களை மாகாண இடமாற்ற சபைக்கு முன்னிலைப்படுத்தப்பட்டமை தொடர்பான தகவலை அறிந்து கொள்ள உரித்துடையவர்களாதலால் அது தொடர்பான எழுத்துமூல தகவல்களை ஆசிரியர்களுக்கு வழங்க வலயக் கல்விப் பணிப்பாளர்கள் தேவைப்படுத்தப்படுகின்றார்கள்.

## 5.0 இடமாற்ற சபையின் செயற்பாடுகள்

5.1 வடமாகாண இடமாற்றக் கொள்கையை அமுல்படுத்தும் போது வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறைகளை ஒழுங்குபடுத்தும் தாபன விதிக்கோவை அத்தியாயம் XVIII பிரிவு 190 க்கு அமைவாக செயற்பட வேண்டும்.

பிரிவு 190:

வருடாந்த இடமாற்றச் சபைகள் பின்வரும் வகைசார் இடமாற்றங்கள் தொடர்பாக செயலாற்றக் கூடாது.

- அரசாங்க நிறுவனமொன்றில் நிலைய மாற்றத்துடன் தொடர்புபடாத உள்ள இணைப்புக்கள்.
- ஓர் ஒழுக்காற்றுக் கட்டளையின் மீது அல்லது ஓர் ஒழுக்காற்று நடைமுறையினால் தேவைப்படுவதன் பேரில் செய்யப்படும் இடமாற்றங்கள்.
- சேவையின் அவசர தேவைப்பாடுகளின் பேரில் செய்யப்படும் இடமாற்றங்கள்.
- உத்தியோகத்தர்களின் வேண்டுகோள்கள் மீது செய்யப்படும் பரஸ்பர இடமாற்றங்கள்.

## 6.0 வட மாகாண ஆசிரியர் இடமாற்றச் சபையின் உள்ளடக்கம்

6.1 வட மாகாண ஆசிரியர் இடமாற்றக் கொள்கைக்கமைவாக இடமாற்றசபை அங்கத்தவர்களை தீர்மானிக்கும் அதிகாரம் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கே உரியதாகும்.

6.2 வடமாகாணத்தின் ஆசிரியர் இடமாற்றச்சபையின் தலைவர் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் (கல்வி நிர்வாகம்) அல்லது மாகாணக் கல்விப் பணிப்பாளரினால் பெயர் குறிப்பிடப்படும் மாகாணக் கல்வித் திணைக்கள சிரேஸ்ட உத்தியோகத்தர்.

அங்கத்தவர்கள்:-

- வடமாகாணத்தின் ஆசிரியர் இடமாற்றச்சபையில் நிர்வாகப் பிரிவின் இரண்டு பிரதிநிதிகள் (திணைக்களத்தின் இப்பணிகளுக்குப் பொறுப்பான இரு பதவிநிலை உத்தியோகத்தர்கள்)
- மாகாண கல்வி அமைச்சின் பிரதிநிதி ஒருவர்
- மாகாணக் கல்வித் திணைக்கள பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி)

உள்ளடங்கியதாக இருக்க வேண்டும்.

een
e Copy
ice Officer
tural Affairs

வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறைகளை ஒழுங்குபடுத்தும் தாபன விதிக்கோவை அத்தியாயம் XVIII க்கு பிரிவு 189 உபபிரிவு III அமைவானதான தொழிற்சங்கப்பிரதிநிதிகள் வருடாந்த இடமாற்றக் குழுவினது விடயப்பரப்பிற்குட்பட்ட உத்தியோகத்தர் வகுதி அல்லது சேவைக்குரியதும் மாகாண பொதுச்சேவையில் ஆகக்குறைந்தது 15% இனை பிரதிநிதித்துவப்படுத்துகின்றதும் தாபன விதிக்கோவையின் அத்தியாயம் XXV இன்படியான ஏற்பாடுகளுக்கு உட்பட்டு விளங்குகின்றதுமான தொழிற்சங்கங்களிலிருந்து பெயரிடப்படுகின்ற பிரதிநிதிகள்.

இடமாற்றப் பட்டியல் மாகாணக் கல்விப் பணிப்பாளரது அங்கிகாரத்தினைப் பெற்ற பின்பே அமுலாக்கம் செய்யப்படல் வேண்டும்.



Scanned with CamScanner

## 7.0 வடமாகாண ஆசிரியர் இடமாற்ற மீளாய்வு சபையின் உள்ளடக்கம்

7.1 வட மாகாண ஆசிரியர் இடமாற்றக் கொள்கைக்கமைவாக இடமாற்ற மீளாய்வு சபையின் அங்கத்தவர்களை தீர்மானிக்கும் அதிகாரம் கல்வி அமைச்சின் செயலாளருக்கே உரியதாகும்.

7.2 வடமாகாண ஆசிரியர் இடமாற்ற மீளாய்வு சபையின் தலைவர்:- வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் அல்லது கல்வி அமைச்சினது செயலாளரால் பெயர் குறிப்பிடப்படும் சிரேஸ்ட உத்தியோகத்தர்.

**அங்கத்தவர்கள்:-**

இடமாற்ற சபையினை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு உத்தியோகத்தருடன் கல்வி அமைச்சின் பிரதிநிதி மற்றும் இடமாற்ற சபையை பிரதிநிதித்துவப்படுத்தாத இரண்டு பதவிநிலை உத்தியோகத்தர்கள். (இவர்களுடன் தொழிற் சங்க பிரதிநிதிகள் இது பந்தி 6.2 ற்கு அமைவானதாக இருக்க வேண்டும்.)

## 8.0 மீளாய்வும் மேன்முறையீடும்

8.1 இடமாற்றம் பெற்ற ஆசிரியா் வழங்கப்பட்ட இடமாற்றக் கட்டளை தொடர்பில் மீளாய்வு விண்ணப்பம் சமா்ப்பிக்கும் சந்தா்ப்பத்தில் அம்மீளாய்விற்கான பதில், எழுத்து மூலமாக வழங்கப்படல் வேண்டும். மீளாய்வு விண்ணப்பத்திற்கான பதில் கிடைக்கும் வரை தற்போது சேவையாற்றும் பாடசாலையில் சேவையாற்றச் சந்தா்ப்பம் வழங்கப்படல் வேண்டும்.

8.2 இடமாற்றக் கட்டளைக்கான மீளாய்வு விண்ணப்பம் உரிய தொடர்பாடல் வழிமுறைகளினூடாக ஆசிரியரால் ஒரு தடவை மாத்திரமே சமர்ப்பிக்க முடியும். ஆசிரியர் மீளாய்வு முடிவுகள் திருப்தியில்லாதவிடத்து, மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவிற்கு உரிய தொடர்பாடற் படிமுறைகளினூடாக மேன்முறையீடு செய்ய முடியும். ஆசிரியர்கள் மேன்முறையீடுகளின்போது உரிய தொடர்பாடற் படிமுறைகளினூடாகச் செல்லாது மேன்முறையீடுகளைச் சமர்ப்பிப்பது தவறானது என்பதால் அது தாபன விதிக்கோவைகளின் அடிப்படையிலான நடவடிக்கைகளை எடுக்க ஏதுவாக அமையும். அவ்வாறில்லாது வேறு மட்டங்களிலிருந்து வரும் விண்ணபத்தினை அல்லது கோரிக்கையினை கருத்தில் எடுக்க வேண்டிய அவசியம் இல்லை.

## 9.0 இடமாற்றம் மேற்கொள்ளும் கால எல்லை

வருடாந்த ஆசிரிய இடமாற்றச் செயற்பாடுகள் சகல ஆண்டுகளிலும் மே மாதம் 31 ஆம் திகதி ஆரம்பித்து நவம்பர் மாதம் 1 ஆந் திகதி முடிவுறுத்தல் வேண்டும். அடுத்த ஆண்டின் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் அமுல்படுத்துதல் வேண்டும். க.பொ.த.(உ.த) வகுப்புகளுக்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான இடமாற்றங்கள் ஆகஸ்ட் மாதம் 1 ஆந் திகதி நடைமுறைக்கு வரும் வகையில் வழங்கப்படவேண்டும்.

வருடாந்த இடமாற்றம் நடைமுறைப்படுத்தப்படுவது பாடசாலைக் கல்வி ஆண்டின் பாடசாலையின் ஆரம்ப தினத்திலிருந்தாகும். சேவைக் காலத்தினை அதற்கு முந்தைய ஆண்டின் டிசம்பர் 31 ஆந் திகதி வரை கருத்தில் எடுக்கப்படும்.

இடமாற்ற விண்ணப்பங்கள் யாவும் விண்ணப்ப முடிவு திகதிக்கு முன்னர் சம்பந்தப்பட்ட வலயக் கல்வி அலுவலகங்களுக்கு கிடைக்கப்பெற வேண்டும் என்பதுடன் அவ்விண்ணப்பங்களை நிகழ்நிலையினூடாக (Onilne) மாகாண தரவுத்தளத்தில் (EMIS) பதிவேற்றம் செய்யப்படல் வேண்டும்.

சி.திருவாகரன்
செயலாளர்
...சேவை ஆணைக்குழு

Original Seen
Certified True Copy
P.Ramesh

Scanned with CamScanner

**10.0 வட மாகாண வருடாந்த ஆசிரிய இடமாற்றச் செயற்பாடுகளுக்குரிய கால எல்லை**

வருடாந்த ஆசிரிய இடமாற்றம் மேற்கொள்வதற்கான உரிய கால எல்லை கீழ்க்குறிப்பிடப்பட்டவாறு அமைகின்றது.

| இல | விடயங்கள் | கால எல்லை |
|---|---|---|
| 01 | ஆசிரிய இடமாற்றங்களின் உரிய சகல தகவல்களையும் திரட்டுதல் | மே 31 ற்கு முன்னர் |
| 02 | ஆசிரிய இடமாற்ற விண்ணப்பங்களைக் கோரல் | ஜூன் 1 - ஜூன் 30வரை |
| 03 | இடமாற்றச் சபையின் கூட்டத்தை நடாத்தல் | ஜூலை 1 - ஜூலை 31வரை |
| 04 | ஆசிரிய இடமாற்றச்சபையின் பரிந்துரையைப் பெறல் | ஆகஸ்ட் 01 – ஆகஸ்ட் 15 வரை |
| 05 | இடமாற்றக் கட்டளை வழங்கல் | செப். 15- செப் 30 வரை |
| 06 | மேன்முறையீடுகளைப் பொறுப்பேற்றல் | ஒக்.1 – ஒக்.15 வரை |
| 07 | மேன்முறையீட்டுச் சபைகளின் தீர்மானங்களைப் பெற்றுக் கொள்ளல் | நவம். 1 ற்கு முன்னர் |

10.2 வலய, மாகாண இடமாற்றச்சபைகளின் இடமாற்றத் தீர்மானங்கள் உரிய காலத்தில் இணையத்தளத்தில் வெளியிடப்படல் வேண்டும்.

இவ் வட மாகாண ஆசிரிய இடமாற்றக் கொள்கை வடமாகாண கௌரவ ஆளுநர் அவர்களின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றது என்பதனால் மாகாண, வலய மட்ட இடமாற்றங்கள் இக்கொள்கைக்கு அமைவாக வழங்கப்படல் வேண்டும். இக்கொள்கையானது 2022.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வருதல் வேண்டும். எனவே ஆசிரியர்களின் இடமாற்றம் தொடர்பாக செயற்படும் சகல உத்தியோகத்தர்களும் இக்கொள்கைக்கமைய செயற்பட வேண்டுமென அறிவிக்கின்றேன்.

***10.3 இவ் இடமாற்றக்கொள்கை காலத்திற்கு காலம் தேவையேற்படும் பட்சத்தில் மீளாய்வு செய்யப்பட்டு திருத்தியமைக்கப்படலாம். இதற்கான முறையான அனுமதி பெறப்படல் வேண்டும்.***

தயாரித்தவர்,

ப. துஸ்யந்தன்
முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்

செவ்வை பார்த்தவர்,

தி. ஜோன் குயின்ரஸ்
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
(கல்வி நிர்வாகம்)

T. John Quintus
Additional Provincial Director of Education
(Edu. Administration)
Provincial Dept. of Education
Northern Province
0773981888

சிபார்சு செய்து முன்னிலைப்படுத்தப்படுகின்றது.

செ.உதயகுமார்,
மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
மாகாணக் கல்வித் திணைக்களம்,
வடக்கு மாகாணம்.

செ.உதயகுமார்
மாகாணக் கல்விப் பணிப்பாளர்
மாகாணக் கல்வித் திணைக்களம்
வட மாகாணம்

Original Seen
Certified True Copy

P.Ramesh
Chief Management Service Officer
Ministry of Education, Cultural Affairs,
Sports & Youth Affairs
Northern Province

சி.திருவாகரன்
செயலாளர்
பொதுச்சேவை ஆணைக்குழு
வட மாகாணம்



Scanned with CamScanner

சிபார்சு செய்து முன்னிலைப்படுத்தப்படுகின்றது.

.......................................

இ.இளங்கோவன்,
செயலாளர்,
கல்வி அமைச்சு,
வடக்கு மாகாணம்.

இ. இளங்கோவன்
செயலாளர்
கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
வடமாகாணம்

.......................................
திகதி

சிபார்சு செய்து முன்னிலைப்படுத்தப்படுகின்றது.

.......................................

செயலாளர்,
மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.

சி.திருவாகரன்
செயலாளர்
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
வடமாகாணம்

13/12/21
திகதி

அனுமதிக்கப்படுகிறது/ ~~அனுமதிக்கப்படவில்லை.~~

.........................

கௌரவ ஆளுநர்,
ஆளுநர் செயலகம்,
வட மாகாணம்.

29/01/2022
திகதி

Approved / Not Approved

.......................................
Governor
Nothern Province

Original Seen
Certified True Copy

P.Ramesh
Chief Management Service Officer
Ministry of Education, Cultural Affairs,
Sports & Youth Affairs
Northern Province



Scanned with CamScanner